**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121/2015**

**வழக்கு சாட்சி: PW.12**

**தேதி: 13.03.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **பிரபு** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **சுந்தரராஜன்** | **தொழில்:** | **மருத்துவர்** |
| **கிராமம்:** | **மதுரை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **மதுரை** | **வயது:** | **35/2024** |

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவ நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் மருத்துவமனையில் 31.07.2012 அன்று அவசர சிகிச்சைப் பிரிவில் மருத்துவராகப் பணிபுரிந்து திரு.சங்கர் ஹிப்பார்கி என்ற மருத்துவர் எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்து தற்சமயம் எங்கு இருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது. அவருடைய கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும். அதனடிப்படையில் நான் இன்று சமூகம் நீதிமன்றத்தில் நீதிமன்ற உத்தரவின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் 31.07.2012 அன்று மதியம் 2.00 மணியளவில் சிங்கமுத்து மகன் வாச்சாரக்காளை என்பவரை சிகிச்சைக்காக அவசர பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு பின்னந் தலையில் வெட்டுக்காயமும், முன்னந்தலையில் வெட்டுக் காயமும், இடது விலா பகுதியில் குத்துக் காயமும் காணப்பட்டு அதற்காக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட காயச் சான்றிதழ் **அ.த.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு ஏற்பட்ட குத்துக்காயம் அ.த.சா.பொ.2 ஆன கத்தியால் ஏற்பட வாய்புள்ளதா என்றால் உள்ளது. இது சம்பந்தமாக எங்கள் மருத்துவமனையில் பணிபுரிந்த திரு.சங்கர் ஹிப்பார்கி என்ற மருத்துவர் தான் அ.த.சா.ஆ.14 வழங்கியுள்ளார். அவர் ஆய்வாளிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

எங்கள் மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் விபத்து பதிவேட்டு நகல் AR.No.32730 தட்டச்சு செய்யப்பட்ட நகலுக்கு பதிலாக எங்கள் மருத்துவமனையில் வழங்கப்பட்ட கையால் எழுதப்பட்ட காயச் சான்றிதழ் தான் தாக்கல் செய்துள்ளோம். காயம்பட்ட வாச்சரக்காளை என்பவரை அவரது சகோதரர் முத்துக்குமார் என்பவர் எங்கள் மருத்துவமனைக்கு 31.07.2012 12.30 A.M க்கு சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 12.30 A.M என்பது அதிகாலை. அ.த.சா.ஆ.14ல் காயம்பட்டவர் எந்த ஆயுதங்களால் தாக்கப்பட்டார் என குறிப்பிடவில்லை. ஆனால் தாக்கப்பட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் மருத்துவமனை ஆவணங்களில் அவர் கத்தியால் தாக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாச்சரக்காளைக்கு ஏற்கனவே பின்னந்தலையிலும், முன்னந்தலையிலும் தையல் போடப்பட்ட காயங்கள் இருந்ததாகவும் மற்றும் குத்துக்காயம் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காயம்பட்ட வாச்சரக்காளையை 31.07.2012 மதியம் 02.00 மணிக்கு மருத்துவர் பார்த்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதற்கு முன்னதாக வாச்சாரக்காளை எந்த மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து தையல் போட்டுக் கொண்டார் என்ற விபரம் Reffer Format ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். குத்துக் காயத்தில் இரத்தக் கசிவு இருந்ததாக குறிப்பிடப்படவில்லை. வாச்சரக்காளை உணரும் தன்மையுடனும், பேசக்கூடிய தன்மையுடனும் இருந்தாரா என அ.த.சா.ஆ.14ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் எங்கள் மருத்துவமனை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாச்சரக்காளை என்ற நபர் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரவில்லை என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக ஆவணம் தாக்கல் செய்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121/2015**

**வழக்கு சாட்சி: PW.13**

**தேதி: 13.03.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **திரு.செந்தில்குமார்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **வெள்ளையன்** | **தொழில்:** | **மருத்துவர்** |
| **கிராமம்:** | **சிவகங்கை** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **சிவகங்கை** | **வயது:** | **39/2024** |

எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத் துறையில் உதவி பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.03.2024 அன்று நான் மேற்கண்ட துறையில் பணியிலிருந்த போது சிவகங்கை மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றத்திலிருந்து வந்த கடிதத்தின் அடிப்படையில் காயம்பட்ட முருகேசன் த/பெ சிங்கமுத்து 23 வயதுள்ள நபரின் முதல் சிகிச்சையளித்த மருத்துவர் குமரகுரு என்பவர் இறந்ததன் அடிப்படையில் அவருடைய மருத்துவச் சான்றை சரிபார்த்து அவருக்கு பதிலாக இன்றைய தேதியில் அவருடைய மருத்துவச் சான்றை சாட்சியம் அளிக்கிறேன். இறந்த மருத்துவர் திரு.குமரகுரு அவர்களின் மருத்துவ அறிக்கையின் படி காயம்பட்ட முருகேசன் த/பெ சிங்கமுத்து கடந்த 31.07.2012 சுமார் 11.50 மணியளவில் சித்தலூர் அருகில் நான்கு நபர்கள் தன்னை ஆயுதத்தால் தாக்கியதாகவும் அதனால் இடது பக்க மார்பில் காயம் ஏற்பட்டதாக கூறி அதனடிப்படையில் அவரை பரிசோதித்தில் இடது பக்க மார்பில் 0.5 x 0.5 x 0.5 அளவிலான தோல் சிதைந்த காயம் ஒன்று இருப்பதாக தனது மருத்துவ அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அந்த காயமானது சாதாரமான காயம் என இறந்த மருத்துவர் குமரகுரு தனது சான்றில் குறிப்பிட்டுள்ளார் என நான் சான்று வழங்குகிறேன். மருத்துவர் குமரகுரு வழங்கிய மருத்துவச் சான்று **அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த காயமானது அ.த.சா.பொ.2 கத்தியின் கைப்பிடி பாகத்தின் மேல் பகுதியிலுள்ள சீரற்ற பகுதியினால் ஏற்பட வாய்புள்ளது என்றால் உள்ளது.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

இறந்த மருத்துவர் குமரகுருவின் மருத்தவ அறிக்கையில் நோயாளி 10.50க்கு தாக்கப்பட்டதாக குறிப்பிட்டு பின்னர் 11.50 ஆக திருத்தப்பட்டுள்ளது என்றால் அதை இறந்த மருத்துவர் குமரகுரு தான் தனது அறிக்கையில் திருத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. இறந்த மருத்துவர் குமரகுருவின் மருத்துவ அறிக்கையில் நோயாளி நான்கு நபர்கள் கத்தியால் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிட்டுள்ளார். இறந்த மருத்துவர் குமரகுருவின் மருத்துவ அறிக்கையில் நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து வந்தவர் யார் என்று அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் முதல் அறிக்கை என்னிடம் தரப்படவில்லை. இறந்த மருத்துவர் குமரகுருவின் மருத்துவ அறிக்கையில் இடது பக்க மார்பு பகுதியில் காயம் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. கூர்மையான கண்ணாடி மற்றும் கதவிலுள்ள கம்பி கிராதி ஆகியவைகளில் விழுந்தால் இந்த காயம் ஏற்பட வாய்புள்ளதா என்றால் இறந்த மருத்துவர் குமரகுருவின் அறிக்கையின் படி அந்த காயத்தின் அளவு ஆழம் அதனடிப்படையில் வாய்ப்பில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க இறந்த மருத்துவர் குமரகுருவின் போலியான அறிக்கையின் படி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.